மனித
# உரிமைகள் மீட்பு
மாதமிருமுறை இதழ்
உரிமை - 8 மீட்பு - 14 அக்டோபர் 16 - 30 | 2023 விலை 20/-





## நற்சிந்தனை நன்னடை மாணவ சமுதாயத்தின் இதயத்தில் நற்சிந்தனைகளை விதைப்போம்..!


SELECTED QUALITY
HYGIENIC PACKING
UMMANI
TEA DUST
CTC TEA DUST
100g
UMMANI
TEA DUST
தமிழகம் முழுவதும்
மாவட்ட வாரியாக
முன் பணம் இல்லாமல்
டீலர்கள் தேவை!
50g - ₹.22
100g - ₹.36
250g - ₹.70
500g - ₹.140
1kg - ₹.280
தங்கள் தொடர்புக்கு:
9952119066

# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)


வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-8 மீட்பு-14 அக்டோபர் 16-30 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.
**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.
**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
S. ஆல்பர்ட் பிரான்சிஸ் சேவியர், R. சந்திரபோஸ்.
**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.
**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.
**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா
**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.
**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், S. முத்து இப்ராகிம் ஷா, M. ஜெய்பிரசாத்.
**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.
**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.
**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.
**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு, R. தாகிர், K. ரவிச்சந்திரன்.
**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ், A. மன்சூர், தனுஷ் பாண்டியன், J தாஹிர்.
**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார்.
**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி, M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.
**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, S. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன், முபாரக் அலி, ராஜா முகமது, ரஸியாபேகம், சுவைஹாபேகம், M. மல்லிகா, முகமது அஜீஸ் K. ராஜ்குமார், V. தசரதன்.
**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை),
R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி),
M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி),
K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்),
R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்),
C. முருகன் BA BL (நாகப்பட்டினம்),
D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி),
S. மோகன் காந்தி BA BL (ஒசூர்).
**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

### முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

இப்படிக்கு
-ஆசிரியர்




# தமிழகத்தில்தான் சாதிய வன்கொடுமைகள் அதிகரிப்பு

## ஆளுநர் ஆர்.என்.ரவி வேதனைப் பேச்சு

**“தமிழகத்தில்தான் சாதிய வன்கொடுமைகள் தற்போது அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் நடைபெற்று வரும் நிகழ்வுகளைக் கேட்கும் பொழுதெல்லாம் மிகவும் வேதனையாக இருக்கின்றது” என்று நந்தனார் குரு பூஜை விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பேசினார்.**

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், மா.ஆதனூர் கிராமத்தில் தமிழ் சேவா சங்கம் சார்பில் திருநாளைபோவார் நாயன்மார் என்கிற நந்தனார் குரு பூஜை விழா நடைபெற்றது. இதில் கலந்துகொள்ள தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மா.ஆதனூருக்கு வந்தார். பின்னர் அக்கிராமத்தில் உள்ள நந்தனார் கோயிலை பார்வையிட்டு அங்கிருந்த நந்தனார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முன்னதாக, ஆளுநருக்கு மேல தாளம் முழங்கிட பறை இசையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர், அதே பகுதியில் சிவ குலத்தமம் பூணூல் அணியும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் குத்து விளக்கு ஏற்றி வைத்து விழாவை ஆளுநர் ரவி துவக்கி வைத்தார். ஜோஹோ கார்ப்பரேஷன் நிறுவனர் மற்றும் தலைவர் ஸ்ரீதர் வேம்பு தலைமை தாங்கினார். தமிழ் சேவா சங்க நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்கவலர் ஞானசரவணவேல் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ்வரி நாகராஜன் வரவேற்று பேசினார். இவ்விழாவில் 250க்கும் மேற்பட்டோர் பூணூல் அணிந்து கொண்டனர்.

இதில் ஆளுநர் ரவி பேசுகையில், "ஒரு சமுதாயத்தின் மீது சாதியக் கொடுமைகள் நடைபெறும் வரை நாம் தலை நிமிர்ந்து வாழ முடியாது. பூணூல் அணியும் நிகழ்வில் நானும் கலந்துகொண்டேன். இதில் நீங்கள் வேறு, நான் வேறு என்றால் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் பிரிவுகளை மறந்து நாம் ஒன்றாக இருக்க வேண்டும், நமது நாட்டின் பிரதமர், நாட்டில் உள்ள அனைத்து பிரச்சினைகளையும், அனைத்து மக்களையும் தன்னுடைய சொந்த மக்களாக நினைத்து பாடுபட்டு வருகிறார். அனைவரையும் ஒரு குடும்பமாக நடத்தப்படுகின்றனர். இந்த சிந்தனை எங்கள் மகாகவி பாரதியார் உடையது. நம் நாட்டில் அனைவரையும் தம்முடைய குடும்பமாக பிரதமர் நடத்தி வருகிறார்.

இன்னொரு புறம் நாட்டு மக்களை மத ரீதியாகவும், சாதி ரீதியாகவும் பிரித்து ஒரு வகையான அரசியல் நடந்து கொண்டிருக்கிறது. பாரதியார் வரிகள் போல இந்த நாட்டில் ஒரே குடும்பமாக குடும்பத்தினரை போல நாட்டின் வளர்ச்சிக்காகவும், உங்களுடைய வளர்ச்சிக்காக நாம் அனைவரும் கைகோத்து ஒரு குடும்பமாக செயல்பட்டு, அதனால் நிச்சயம் ஒரு நல்ல எதிர்காலத்தை நாம் அடைய முடியும்.

அதிகபட்ச வழக்குகளில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவது இல்லை, தண்டிக்கப்படுவதில்லை. ஆகவே, இந்தக் குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்து கொண்டிருக்கின்றது. கேவலமாக, வன்மையாக கண்டிக்கத்தக்கக் கூடிய ஒரு குற்றச் செயல்தான் பாலியல் வன்கொடுமை. அந்தக் குற்றச் செயலில் ஈடுபவர்கள் 100 பேரில் வெறும் ஏழு சதவீதம் பேர் மட்டும்தான் தண்டிக்கப்படுகிறார்கள். தவிர மீதம் உள்ள 93 சதவீதம் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டு விடுகிறார்கள்.

மேலும், சாதிய வன்கொடுமைகள் எந்த அளவுக்கு மோசமாக சென்றுவிட்டது என்றால், தமிழகத்தில் வேங்கைவயலில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடிக்கின்ற மேல்நிலை குடிநீர் தொட்டியில் மலத்தை கலக்கின்றார்கள், நாங்குநேரியில் படிக்கின்ற 12 வயது மாணவரை நன்றாக படிக்கிறான் என ஆசிரியர்கள் பாராட்டியதன் காரணமாக மாற்று சமுதாயத்தை சேர்ந்த மாணவர்களே, அந்த மாணவனின் வீடு சென்று அவரை கடுமையாக தாக்கியுள்ளனர்.

இந்த மாதிரி கொடுமைகள் தமிழகத்தில்தான் தற்போது அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது. பள்ளியில் படிக்கும் சிறுவர்கள் தங்களை வித்தியாசப்படுத்திக் கொள்வதற்காக தங்களுடைய சாதியின் அடிப்படையில் கலர், கலராக கயிறுகளை கையில் கட்டிக்கொண்டு தன்னை ஒரு மாணவரிடம், இன்னொரு மாணவர் மாணவர் இடத்தில் வித்தியாசப்படுத்தி கொண்டு வருகின்றனர். இது எந்த மாதிரியான கலாச்சாரம் என தெரியவில்லை. கலாசார சீரழிவு ஏற்பட்டுள்ளது.

நந்தனார் போல் உள்ள சிவபக்தர் விழாவில் கலந்து கொள்வது பாக்கியமாக கருதுகிறேன், மிகப் பெரிய முனிவர்கள் எப்பொழுதுமே ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருந்து தான் தோன்றியிருக்கின்றார்கள். உலகத்தை தோற்றுவித்த பிறகு உலகில் உள்ள ஒவ்வொரு அசைவிலும் ஆண்டவர் இருக்கின்றார். நமது அனைவரின் உள்ளத்திலும் கடவுள் இருக்கின்றார். நாம் எத்தனை வகையாக இருந்தாலும், தனித் தனியாக நம்முடைய பிரார்த்தனை முறைகள் வேறுபட்டு இருந்தாலும், நம் அனைவருடைய உள்ளங்களிலும் கடவுள் ஒருவர் எல்லாருடைய மனதிலும் கூடியிருக்கின்றார்.

வேதத்தில் நம்மில் யாரும் தாழ்ந்தவர்களோ, உயர்ந்தவர்களோ அல்ல. நாம் அனைவரும் சமமானவர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த நாட்டில் எல்லா பகுதிகளிலும் அதாவது இந்தப் பாகுபாடு, இந்தப் பிரிவினை உள்ளது. ஆனால், தமிழகத்தில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நடைபெற்று வரும் ஒவ்வொரு நிகழ்வுகளை கேட்கும் பொழுதெல்லாம் மிகவும் வேதனையாக இருக்கின்றது. காரணம், இந்த சமுதாயத்தில், மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற இந்த ஒரே காரணத்துக்காக அவர்கள் மீது இத்தனை சாதிய வன்கொடுமைகள் திணிக்கப்படுவதை நினைக்கும்போது உண்மையிலேயே மனம் வேதனை அடைகிறது.



பொருளாதாரம், ஒற்றுமையில் பாகுபாடு என்று இது அரசியல் ஆக்கப்பட்டுள்ளது. இந்த சமுதாயத்தில் ஒரு மாபெரும் பிரிவினரை ஆலயத்துக்குள் பிரவேசிக்க தடை செய்யப்பட்டு வருகின்றது. இதைபார்க்கும் பொழுது மனம் வேதனை அடைகிறது. இந்த மாதிரி செயல் எங்களுடைய இந்த சனாதன தர்மத்திலோ அல்லது இந்து மத தர்மத்திலோ இல்லை" என்று ஆளுநர் ஆர்.என்.ரவி கூறினார்.

இந்நிகழ்வில் தென்னிந்திய ஆதிதிராவிடர் மகாஜன சங்கம் பொதுச் செயலாளர் மாறன் நாயகம், சிதம்பரம் சுவாமி சகஜானந்தர் பேரன் ஜெயச்சந்திரன். புனிதா இளவரசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# குறுவை பாதிப்பு



## டெல்டா மாவட்டங்களில் ஹெக்டேருக்கு ரூ.13,500 இழப்பீடு

### முதல்வர் அறிவிப்பு

காவிரி ஆற்றில் கர்நாடக மாநிலத்திலிருந்து போதிய அளவு தண்ணீர் பெறப்படாததால், டெல்டா மாவட்டங்களில் குறுவை பயிர் சாகுபடியால் பாதிக்கப்பட்டுள்ள பயிர் பாதிப்பு விவரங்கள் முறையாக கணக்கிடப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500 இழப்பீட்டுத் தொகையாக வழங்கிட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழகத்தில் டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், குறுவை சாகுபடி செய்வதற்கு ஏதுவாக, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினால், கடந்த 12.6.2023 அன்று மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால், காவிரி ஆற்றில் கர்நாடக மாநிலத்திலிருந்து போதிய அளவு தண்ணீர் தொடர்ந்து பெறப்படாத காரணத்தால், மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்துக்கு போதிய அளவு தண்ணீர் திறந்துவிட இயலாத நிலையில், தற்போது டெல்டா மாவட்டங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் வாடிய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

பயிர் பாதிப்பு விவரங்கள் முறையாக கணக்கிடப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500 இழப்பீடாக வழங்கிட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.



# மதுரையில் மேல்நிலை குடிநீர் தொட்டி மீது பாதுகாப்பு உபகரணம் இன்றி பணிபுரியும் தொழிலாளர்கள்

**மதுரை பெரியாறு கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பெரியார் பேருந்து நிலையம் அருகே மேலவாசல் பகுதியில் மேல்நிலை குடிநீர் தொட்டியில் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் எவ்வித பாதுகாப்பு உபகரணங்கள் இன்றி பணிபுரிகிறார்கள்.**

மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் பெரியாறு கூட்டுக் குடிநீர் திட்டத்தில் 100 வார்டுகளில் குடிநீர் குழாய் பதிக்கும் பணி நடக்கிறது. இத்திட்டத்தில் லோயர் கேம்ப் பகுதியில் இருந்து வரும் குடிநீரை, விநியோகம் செய்ய மாநகராட்சி பகுதியில் 47 மேல்நிலை குடிநீர் தொட்டிகள் கட்டப்படுகின்றன. இதில் பெரும்பாலான குடிநீர் தொட்டிகள் கட்டும் பணி நிறைவடைந்த நிலையில், சில இடங்களில் இன்னும் பணிகள் நடக்கின்றன.

பெரியார் பேருந்து நிலையம் அருகே மேலவாசல் பகுதியில் மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டுமானப் பணி நடக்கிறது. இதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் போதுமான பாதுகாப்பு உபகரணங்கள், கவச உடைகள் இன்றி பணிபுரிகிறார்கள். சிறு அசம்பாவிதம் ஏற்பட்டாலும் உயிருக்கு ஆபத்தானதாகும். எனவே, மாநகராட்சி அதிகாரிகள், தொழிலாளர்கள் பாதுகாப்பு உபகரணங்கள், கவச ஆடைகள் அணிந்து பணிபுரிகிறார்களா? என்பதை கண்காணிக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.



# கோவையில் நிர்மலா சீதாராமனுடன் அதிமுக எம்எல்ஏக்கள் சந்திப்பு

# நடந்தது என்ன?

மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் கோவையில் அதிமுக எம்.எல்.ஏக்கள் சந்தித்துப் பேசினர். பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக இருந்தது. பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை, மறைந்த முன்னாள் முதல்வர்கள் பேரறிஞர் அண்ணா, ஜெயலலிதா குறித்தும் பேசியதால், பாஜக  அதிமுக கூட்டணியில் மோதல் ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக, கடந்த மாதம் 25ம் தேதி அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தலைமையில் நடந்த அக்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தின் முடிவில், பாஜகவுடனான கூட்டணியை அதிமுக முறித்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

*அதிமுகவை மீண்டும் கூட்டணிக்குள்*



கொண்டுவர பாஜக பல்வேறு வகைகளில் முயன்று வருவதாக கூறப்படுகிறது. இதற்கிடையே, கூட்டணி முறிவைத் தொடர்ந்து, பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை புதுடெல்லியில் முகாமிட்ட கட்சியின் தேசிய தலைவர்களை சந்தித்ததார். அப்போது, அண்ணாமலைக்கு பாஜக மூத்த தலைவர்கள் அறிவுரை வழங்கியதாக கூறப்படுகிறது.

மத்திய அமைச்சருடன் சந்திப்பு: இச்சூழலில், கோவை கொடிசியா அரங்கில் நடந்த வங்கிக் கடன் உதவி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை, அதிமுக எம்.எல்.ஏக்கள் பொள்ளாச்சி வி.ஜெயராமன், ஏ.கே.செல்வராஜ், அமுல் கந்தசாமி ஆகியோர் திடீரென சந்தித்துப் பேசினர். எம்.எல்.ஏக்கள் மூவரும் மத்திய அமைச்சரிடம் மனுவை வழங்கினர். பாஜக அதிமுக கூட்டணி முறிவு என்பது வெறும் நாடகம் என இண்டியா கூட்டணியில் உள்ள கட்சியினர் கூறி வரும் சூழலில், அதிமுக எம்.எல்.ஏக்கள், பாஜகவைச் சேர்ந்த மத்திய அமைச்சரை சந்தித்துப் பேசியுள்ளனர். இச்சந்திப்பின்போது அரசியல் பேசவில்லை, கோரிக்கை மனுவைத்தான் அளித்தோம் என அதிமுக எம்.எல்.ஏக்கள் தெரிவித்தாலும், தற்போதைய அரசியல் சூழலில் இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

அரசியல் பேசவில்லை: இதுதொடர்பாக முன்னாள் துணை சபாநாயகரும், அதிமுக மூத்த தலைவருமான பொள்ளாச்சி வி.ஜெயராமன் எம்.எல்.ஏ கூறும்போது, ‘‘கடந்த மாதம் விவசாயிகளுடன் புதுடெல்லிக்குச் சென்று மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்தோம். கொப்பரை தேங்காய் கொள்முதல் அளவை உயர்த்த வேண்டும், விலையை கூட்டித்தர வேண்டும், வருடம் முழுவதும் கொப்பரை கொள்முதல் செய்ய வேண்டும், ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெய் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தோம்.

இந்நிலையில்,கோவையில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்க மத்திய அமைச்சர் வந்திருந்தார். இதில் பங்கேற்க முன்னோடி வங்கியில் இருந்து எங்களை அழைத்தனர். நாங்களும் கலந்து கொண்டோம். தற்போதும் மத்திய அமைச்சரை சந்தித்து மனுவை அளித்து கோரிக்கையை நிறைவேற்றித் தர வலியுறுத்தினோம். நானும், எம்.எல்.ஏக்கள் ஏ.கே.செல்வராஜ், அமுல் கந்தசாமி, தென்னிந்திய தென்னை விவசாயிகள் சங்கத்தின் தலைவர் சக்திவேல் ஆகியோர் மத்திய அமைச்சரை சந்தித்தோம்.

இந்தச் சந்திப்பில் வேறு எந்த அரசியல் காரணமும் கிடையாது. கூட்டணி குறித்து நாங்கள் எதுவும் பேசவில்லை. பொதுச்செயலாளர் தான் எந்த முடிவும் எடுப்பார். அரசியல் ரீதியிலான சந்திப்புக்கும் இதற்கும் தொடர்பில்லை. பொள்ளாச்சி முழுமையாக தென்னை விவசாயம் பிரதானமாக உள்ளது. இரண்டரை வருடங்களாக விவசாயிகள் கஷ்டப்பட்டு வருகின்றனர். தமிழக அரசு எதுவும் செய்வதில்லை. அரசியல்பேச கட்சியில் முக்கிய தலைவர்கள் உள்ளனர். நாங்கள் எங்கள் தொகுதி மக்களுக்காக மட்டுமே சந்தித்து பேசினோம். அவர் நிதியமைச்சர், நாங்கள் எம்.எல்.ஏ என்ற அடிப்படையிலேயே சந்தித்தோம்’’ என்றார்.



# மகாத்மா காந்தி 155 - வது பிறந்தநாள்

## ஆளுநர், முதல்வர், தலைவர்கள் மரியாதை

**மகாத்மா காந்தியின் 155வது பிறந்தநாளை முன்னிட்டு ஆளுநர், முதல்வர், தலைவர்கள் காந்தியின் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.**

மகாத்மா காந்தியின் 155வது பிறந்தநாள் விழா, 'காந்தி ஜெயந்தி' விழாவாக நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, சென்னை எழும்பூர் அருங்காட்சிய வளாகத்தில் காந்தியின் சிலைக்கு கீழ் வைக்கப்பட்டுள்ள அவரது படத்துக்கு தமிழக அரசு சார்பில் ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் ஸ்டாலின் மலர்தூவி



மரியாதை செலுத்தினர்.

மேலும் அமைச்சர்கள், துரை முருகன், க.பொன்முடி, எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்,மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, கிரிராஜன் எம்.பி., தலைமை செயலாளர் சிவ் தாஸ் மீனா, செய்தி துறை செயலாளர் இரா.செல்வராஜ், இயக்குநர் த.மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர்.என்.ரவி, சுதந்திர போராட்ட வீரர்களின் கண்காட்சியை திறந்து வைத்தார். தமிழக காங்கிரஸ் தலைமையகமான சத்திய மூர்த்தி பவனில் காந்தியின் படத்துக்கு கே.எஸ். அழகிரி மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், கட்சி தலைமையகமான பாலன் இல்லத்தில் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மூத்த தலைவர் நல்லக்கண்ணு உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

பாஜக சார்பில் மாநில இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி அடையாறு காந்தி மண்டபத்தில் உள்ள காந்தி சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். மேலும், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், காங்கிரஸ் எம்.பி. திருநாவுகரசர், தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் உட்பட பல்வேறு கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்.

தெற்கு ரயில்வே சார்பில் காந்தி ஜெயந்தி மற்றும் தூய்மை பிரசாரம் விழா சென்னை சென்ட்ரலில் நடைபெற்றது. தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங், கூடுதல் பொது மேலாளர் கவுசல் கிஷோர், சென்னை கோட்ட மேலாளர் விஸ்வநாத் ஈர்யா உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

மேலும் மகாத்மா காந்தி பிறந்தநாளை முன்னிட்டு முதல்வர், மற்றும் தலைவர்கள் வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்: அரையாடை அணிந்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வென்ற போராளி. வெறுப்புணர்வுக்கு எதிராக ஒற்றை மனிதராக நின்று சமூகத்தில் அமைதி மலரப் பாடுபட்டவர். அவரது வாழ்வின் பொருளை உணர்த்தவே, இந்த நாட்டுக்கே 'காந்தி தேசம்' எனப் பெயரிட வேண்டும் எனத் தந்தை பெரியார் வலியுறுத்தினார். அவர் தியாகத்தை நினைவுகூர்ந்து, அவரது லட்சியப் பாதையில் வெறுப்புணர்வை ஒழித்து, எல்லார்க்கும் எல்லாம் என்ற இந்தியாவைக் கட்டமைப்போம்.

இதேபோல் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் உட்பட பல்வேறு அரசியல் கட்சியினர், அமைப்புகளை சேர்ந்த தலைவர்கள் மகாத்மா காந்தி பிறந்தநாளுக்கு வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளனர்.



# நற்சிந்தனை நன்னடை

# மாணவ சமுதாயத்தின் இதயத்தில் நற்சிந்தனைகளை விதைப்போம்

**ஒவ்வொரு குழந்தையும் அன்புமயமாகவே பிறக்கிறது. அடிபட்ட ஆட்டையும், நொண்டி செல்லும் நாயையும் கண்டு பச்சாதாபப்படுகிறது. தாய் கண்ணீர் சிந்தினால் அதுவும் அழுகிறது.**

*நாம்தான் மதிப்பெண்கள் மட்டுமே முக்கியம் என்று குழந்தைகளைச் சுயநலம் உள்ளவர்களாகச் சிதைத்து விடுகிறோம். படிப்பதைத் தவிர வேறு எதைச் செய்தாலும் நேர விரயம் என்று அடிப்பது வரை சென்று விடுகிறோம்.*

*உலகம் புத்தகங்களைத் தாண்டியது என்பதைப் புரிய வைக்க வேண்டியவர்கள் நாம்தான். ஆங்காங்கே புத்தகப்பையை மட்டும் சுமக்காமல் கண்களில் கருணையையும், கைகளில் பரிவையும் சுமந்து செல்கின்ற உன்னதக் குழந்தைகள் இருக்கவே செய்கிறார்கள். அவர்களை உச்சி முகர்ந்தால்தான் சமுதாயம் உச்சத்தை அடைய முடியும்.*

*இயற்கையை நேசிப்பது, மானுடத்தை உற்றுக் கவனிப்பது, சக குழந்தைகளின் காயங்களுக்கு*

களிம்பு தடவுவது, ஒரு புல்லுக்குக்கூட வலிக்காமல் நடப்பது, படிப்பில் தடுமாறும் வகுப்புத் தோழனுக்கு ஊன்றுகோலாய் உதவுவது என்று அன்பு ததும்பும் நடவடிக்கைகளின் முதிர்ச்சியால் நம்மை ஆனந்த அதிர்ச்சிக்கு அழைத்துச் செல்லும் மாணவர்கள் கொண்டாடப்பட வேண்டியவர்கள்.



நாம் மதிப்பெண்களை மட்டுமே அங்கீகரிக்கிறோம். பதக்கங்களுக்கு மட்டுமே பரவசப்படுகிறோம். பரிசுகளை நோக்கியே அவர்களைத் தயார்படுத்துகிறோம். எந்த வயதிலும் விழிப்புணர்வோடு ஊன்றிப் படித்தால் வெற்றிபெற்று விடலாம். நாற்பது வயதில் முயன்று நோபல் பரிசு பெற்றவர்கள் உண்டு. ஐம்பது வயதில் கண்டுபிடிப்பை நிகழ்த்தியவர்கள் உண்டு. ஆனால் மனிதநேயம் முளையிலேயே துளிர்த்தால்தான் முதுமையிலும் மணம் பரப்ப முடியும்.

‘நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே‘ என்பது புறநானூற்றுப் பாடல். தாறுமாறாக முளைக்கும் கிளைகளைக் கத்தரித்துச் சீராக வளர்ப்பதுபோல பழக்கங்களையும் செதுக்க வேண்டிய பொறுப்பு இன்று அரசுக்கு மட்டும் அல்ல, பொதுவெளியில் இருக்கும் அனைவருக்கும் உண்டு.

இளம் வயதில் எதிர்பாராதவிதத்தில் மடியில்விழுகிற பாராட்டு, கண்களில் ஒற்றிக்கொள்ளும் பரவசத்தை ஏற்படுத்தி விடுகிறது. அச்சு ஊடகத்தில் மெச்சத்தகுந்த செயல் என்று கைதட்டி அறிவித்தால் அது பிறவிப் பெருங்கடலைக் கடந்த பேரின்பத்தை ஏற்படுத்தும்.



எண்ணற்ற குழந்தைகள் ஒரு மொட்டு மலர்வதைப்போல, ஒரு சிட்டு பறப்பதைப்போல மவுனமாகப் பரோபகாரம் செய்கின்றனர். அவர்களுக்கு அது ஒப்புரவு என்றுகூட தெரியாமல் செய்யப்படுகிற உள்ளத்துப்புரவு அது.

இயல்பாக இதயத்தால் உந்தித்தள்ளப்படுகிற உணர்வால் இவர்கள் இந்த அற்புதச் செயல்களைச் செய்து வருகிறார்கள். மலர்கள் மலர்ந்தால் தேனீக்கள் வருவதைப்போல உள்ளுணர்வால் நிகழும் இந்தச் செயல்களை எல்லா பெற்றோரும் அங்கீகரிக்கிறார்களா என்பதுகூட ஐயமே. ஆனால், இத்தகைய மனிதப் பண்புகள்தாம் அவர்களை விண்ணளவுக்கு வியந்துபார்க்க வைக்கும் வித்தகத்தைச் செய்யப் போகின்றன என்பதைப் பலரும் அறிவதில்லை.

நாம் செல்கிற திசை சரிதானா என்கிற குழப்பத்தை இத்தகைய நல்லுள்ளங்கள் அவ்வப்போது அடைவதுண்டு. கழுத்தறுக்கும் போட்டியில் அவர்கள் தொலைந்து விடாமல் இருக்க, கைவிளக்காய் நாம் ஆற்ற வேண்டிய நற்செயல் ஒன்று உண்டு. அது அவர்கள் முதுகை அவ்வப்போது தட்டிக்கொடுத்து, அவர்கள் வழியில் இன்னும் பலரைப் பயணம் செய்ய ஊக்குவிப்பதே.

இவர்கள் ‘இந்து தமிழ் திசை’ நாளிதழில் இடம்பெறுவது இன்னும் மனிதநேயம் பிஞ்சு உள்ளங்களில் எஞ்சி இருக்கிறது என்பதை நமக்கும் உணர்த்தி, நம் இதயத்திலும் நம்பிக்கைத் தளிர்களைத் துளிர்விடச் செய்வதற்கே!



# ‘தடை உடை’ படத்துக்காக 1000 பேர் பங்கேற்ற திருவிழா பாடல்

சிம்ஹா ஹீரோவாக நடிக்கும் படம், ‘தடை உடை’. முத்ரா பிலிம் பேக்டரி தயாரிக்கும் இந்தப் படத்தில் நாயகியாக மிஷா ரங் நடித்துள்ளார். ரோகிணி, செந்தில், பிரபு, செல் முருகன், தீபக், மணிகண்ட பிரபு, சுப்பிரமணியம் சிவா உட்பட பலர் நடித்துள்ளனர். நடன இயக்குநர் பாபா பாஸ்கர் முழு நீளக் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். கே.ஏ.சக்திவேல் ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு ஸ்ரீ இசை அமைக்கிறார்.

படத்தை இயக்கும் அறிமுக இயக்குநர் ராகேஷ் என்.எஸ் கூறியதாவது: சென்னையைச் சேர்ந்த ஹீரோ ஒரு கிராமத்துக்கு நல்லது செய்ய நினைக்கிறார். வரும் தடைகளை எதிர்த்து கஷ்டப்படும் அவர், அந்த இலக்கை அடைந்தாரா என்பது படம். சிம்ஹா இதுவரை நடித்த பாத்திரங்களில் இருந்து இந்தப் படம் வேறுவிதமாக இருக்கும். அவரை ‘ஃபேமிலி ஆடியன்ஸி’டம் கொண்டு சேர்க்கும் படமாகவும் இருக்கும்.

சென்னை மற்றும் சிவகங்கையில் படப்பிடிப்பு நடந்துள்ளது. ஆயிரம் பேர் பங்குபெற்ற திருவிழா பாடல், படத்தின் ஹைலைட்டான விஷயங்களில் ஒன்றாக இருக்கும். ‘வராத திருவிழா வந்திருக்கு’ என்ற அந்தப் பாடலில் ஏராளமான கிராமத்தினரும் பங்குபெற்றனர்.

இதை போல படத்தின் கிளைமாக்ஸ் சண்டைக்காட்சியும் பேசப்படுவதாக இருக்கும். ‘சிறுத்தை’ கணேஷ்குமார், இந்தச் சண்டைக்காட்சியை அமைத்துள்ளார். படப்பிடிப்பு முடிந்து போஸ்ட் புரொடக்‌ஷன் வேலைகள் நடந்து வருகின்றன. இவ்வாறு ராகேஷ் என்.எஸ் கூறினார்.

Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN



# தமிழகத்தில் ஓராண்டில் 479 பிரசவ உயிரிழப்புகள்

## பொது சுகாதாரத்துறை ஆய்வில் தகவல்

**தமிழகத்தில் பேறு கால மரணங்களைத் தடுக்க பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் மட்டும் இல்லாமல், கர்ப்பிணிகளுக்கு ஊட்டச் சத்தை உறுதி செய்யும்சிறப்பு திட்டங்களும் நடைமுறைப்படுகின்றன. இதனால், பிரசவ காலஇறப்புகள் குறைந்தாலும், முற்றிலும் தடுக்க முடியவில்லை.**

இந்நிலையில், கடந்த ஆண்டுஏப்ரல் மாதம் முதல் நடப்பாண்டுமார்ச் மாதம் வரையிலான காலகட்டத்தில் தமிழகத்தில் நிகழ்ந்த பேறுகால உயிரிழப்புகளுக்கான காரணங்களை பொது சுகாதாரத் துறை ஆய்வு செய்தது. அந்தஆய்வின் முடிவில், ஓராண்டில்479 உயிரிழப்புகள் ஏற்பட்டிருப் பதும், முக்கிய காரணமாக தலா20 சதவீதம் உயர் ரத்த அழுத்தம், அளவுக்கு அதிக ரத்தப்போக்கு இருப்பதும் தெரியவந்தது.

அடுத்தபடியாக 10 சதவீத இதய பாதிப்புகள் ஆகும். அதேபோல், நரம்புசார் பாதிப்புகளாலும், ரத்தகிருமித் தொற்று காரணமாகவும் தலா 9 சதவீத உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. நுரையீரல் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்த கர்ப்பிணிகள் 7 சதவீதமாகவும், கருக்கலைப்பின் போது 5 சதவீதமும், கல்லீரல் பாதிப்புகளால் 4 சதவீத இறப்புகளும் பதிவாகியுள்ளன.

இதுதொடர்பாக பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் கூறும்போது, “கர்ப்ப காலத்தில் உயர் ரத்த அழுத்த பாதிப்பு ஏற்படுவது இயல்பானது. அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க தவறும் போதுதான் அதன் தீவிரம் அதிகமாகிறது. ரத்த அழுத்தம் அதிகமாக இருந்தால், வலிப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும். அது ஒரு கட்டத்தில் உயிரிழப்புக்கு வழிவகுக்கும். ஹீமோகுளோபின் அளவை சரிவர பராமரித்தால் ரத்தப்போக்கு ஏற்படும்போது அதனை சரிசெய்ய முடியும்.

இவ்வாறாக பேறு காலத்தில் தொடர்ந்து மருத்துவப் பரிசோதனைகளையும், மருத்துவர்களின் பரிந்துரைகளையும் பின்பற்றி நடந்தால் உயிரிழப்புகளை தடுக்க முடியும்” என்றார்.

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17



# தீவிவாதிக்கு வேண்டுகோள்...

நான் இறப்பதற்கு தயார்
உயிர்கள் மீது
நான் அன்பு செலுத்தவில்லை!

நான் இறப்பதற்கு தயார்
நீ என் குடும்பத்தைச்
சுமப்பதென்றால்!

மரணம் எல்லாருக்கும் பொது
தீயும் மரணிப்பாய்!
அப்போது
மரணத்தின் வலி
உனக்குத் தெரியும்!

தீவிரவாதி என்று
கூறிக்கொள்ளும் நீ
தையிரியம்மிருந்தால்
என் கல்லறையில்
மலர் வைத்துப்பா!

இனிமேலாவது
உன் கைய்
மலர்களைத் தூக்கட்டும்!

உன் கைகள் வெடி
தொடாதக்கு
அப்போதாவது உனக்கு
உயிரின் வலியும்,
அன்பின் மென்மையும்
அறிவாய் நீ?

உன் வெடிக்குண்டு சத்தமானது
என் குடும்ப அழுகைச்
சத்தத்திற்கு ஈடாகாது!!

அன்பைக் கற்றுத் தர
உனக்கு அன்னை இல்லையா?
அன்பு பாசமென்பதரிய
உனக்குச் சகோதரி இலலையா

சரி விடு

உன் பிள்ளையையாவது
உன் போல் அல்லாது
நல்ல பாதையில்
வாழ வை.

என் மரணம்
உன்னை மாற்றட்டும்!!

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000